மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்**.1** நீதிமன்றம்**,**
கொடைக்கானல்**.**
முன்னிலை. திரு.K.கார்த்திக், M.L.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,
(கூடுதல் முழு பொறுப்பு)
கொடைக்கானல்.
2023 ம் ஆண்டு மார்ச் திங்கள் 27 ம் நாள் திங்கட் கிழமை

**Cr.M.P.No.220/2022**
in
**D.V.O.P.No. 9/2021**

R.பஞ்சவர்ணம், வயது 36 / 2017
த/பெ ராமசாமி,
கதவு எண்.6-4-54,
நேரியபுரம், ஊரல்பட்டி,
பண்ணைக்காடு, கொடைக்கானல். ... மனுதாரர்

//-எதிர்-//

விஜய்,
த/பெ முத்துச்சாமி,
2/80, குளக்கரை,
சங்ககிரி, சேலம் மாவட்டம். ... எதிர்மனுதாரர்

இந்த மனு இன்று இறுதி விசாரணைக்கு வந்த போது, மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர்கள் திருவாளர்கள் V.ஜெபராஜ், K.வேலுமயில் ஆகியோர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.R.பிச்சை, அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் அழைத்தும் ஆஜராகாததால் அவர் ஒருதலைப்படுத்தப்பட்டும், வழக்கின் ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று வரை என்னுடைய பரிசீலனையில் இருந்தும் வந்த இந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

உத்தரவு

இந்த மனு பெண்களை குடும்ப வன்முறையிலிருந்து பாதுகாக்கும் சட்டம் பிரிவு 20(1)(d) ன் கீழ் மனுதாரரால் எதிர்மனுதாரருக்கு எதிராக வாழ்க்கை பொருளுதவியாக உணவு, உடை மற்றும் மருத்துவ செலவினங்களுக்காக மாதம் ரூ.30,000/- வீதம் செலுத்தும்படிக்கும் மற்றும் இம்மனுவின் செலவுத்தொகைக்கும் தாவா மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2.** மனுவின் சுருக்கம்.

மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் வரதட்சணை கொடுமை காரணமாக மனுதாரர் கணவரைப் பிரிந்து பெற்றோருடன் வசித்து வருகிறார். எதிர்மனுதாரரும் அவரது பெற்றோர்களும், அவரது சகோதரரும், சகோதரரின் மனைவியை அடித்து உடலளவிலும், மனதளவிலும் கொடுமை படுத்தி மன உளைச்சல் ஏற்படுத்தி நகையும், பணமும் வாங்கி வா, இல்லாவிட்டால் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ முடியாது என அடித்து துரத்திவிட்டனர். மனுதாரருக்கு 3 ½ வயதில் இனன்யா என்ற பெண் குழந்தை உள்ளது. மனுதாரரின் குழந்தையை கணவர் வீட்டார் 24.03.2021 ம் தேதி மனுதாரரும் அவரது குழந்தையும் மனுதாரரின் பெற்றோரின் வீட்டில் இருந்தபோது, குழந்தையை வழுக்காட்டாயமாக தூக்கிச் சென்று விட்டார்கள். எனவே, மனுதாரருடைய 3 ½ வயதுள்ள பெண் குழந்தை இனன்யாவிற்கு தன்னை கார்டியனாக நியமிக்கக் கோரியும் பெண் குழந்தையை ஒப்படைக்க கோரியும் திண்டுக்கல் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் GWOP.No.129/2021 ல் மனு கொடுத்து அதில் எதிர்மனுதாரருக்கு நோட்டீஸ் சென்றும் எதிர்மனுதாரர் அழைப்பாணையை பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர் தென்கொரியாவில் ஐடி நிறுவனத்தில் பணிபுரிந்து மாதம் ரூ.3,00,000/-ற்கு மேல் சம்பளம் பெற்று பணியாற்றி வருகிறார். எனவே, மனுதாரருக்கு உணவு, உடை, மற்றும் மருத்துவ செலவிற்காக ரூ.30,000/- வீதம் மாதந்தோரும் கொடுக்க உத்தரவிடக்கோரியும் மற்றும் செலவுத்தொகைக்காகவும் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** எதிர்மனுவுரையின் சுருக்கம்

மனுதாரர் மனுவில் கோரியுள்ள காரணங்கள் பொய்யும் புரட்டுமானது. மனுதாரர் அவரது பெற்றோர் வீட்டிற்கு எவ்வித நியாயமான காரணமும் இல்லாமல் சென்றுவிட்டார். உண்மையில் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் திருமணம் நடந்து எவ்வித பிரச்சனையும் இல்லாமல் வாழ்ந்து வந்தார். ஆனால் மனுதாரர் தன்னுடைய ஊரான பண்ணைக்காட்டில் வந்து வாழும்படி பிரச்சனை செய்தார். அதனால், எதிர்மனுதாரர், மனுதாரரின் கோரிக்கையை எந்த வகையிலும் நியாயமில்லாத காரணத்தினாலும், குழந்தை இனன்யா படிக்க நல்ல பள்ளியோ, நல்ல சூழ்நிலையோ, பண்ணைக்காட்டில் இல்லை என்பதாலும், குழந்தையின் எதிர்காலம் கொட்டு விடக்கூடாது என்பதாலும், மனுதாரரின் நியாயமற்ற

கோரிக்கையை நிறைவேற்ற முடியவில்லை என்பதாலும், மனுதாரர் குழந்தையை எடுத்துக்கொண்டு பண்ணைக்காட்டிற்கு வந்துவிட்டார். ஆனால், எதிர்மனுதாரர், மனுதாரரையும், மனுதாரரின் குழந்தையையும் அழைத்தும், மனுதாரர் குழந்தையை தன்னால் பராமரிக்க முடியாது என்று குழந்தையை கொடுத்துவிட்டார். அந்த தேதி முதல் குழந்தை இனன்யா எதிர்மனுதாரர் வசம் வசித்து வருகிறது. இச்சூழ்நிலையில் மனுதாரர், பொய்யான தகவல்களைக் கொடுத்து எதிர்மனுதாரரையும், அவரது குடும்பத்தாரையும் பழி வாங்க நினைத்து திண்டுக்கல் மாவட்ட கண்காணிப்பாளர் மற்றும் கொடைக்கானல் மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து, புகாரின் அடிப்படையில் விசாரணை செய்து, குழந்தை எதிர்மனுதாரரிடம் இருப்பதுதான் குழந்தையின் நல்வாழ்விற்கு சிறந்தது என்று குழந்தையை எதிர்மனுதாரர் வசம் செல்ல அனுமதித்துள்ளார்கள் என்றும், அதன் பின்பு திண்டுக்கல் குழந்தைகள் நல அமைப்பில் மனுதாரர் புகார் கொடுத்து, குழந்தையை தன்னிடம் ஒப்படைக்கும்படி மனு செய்து, எதிர்மனுதாரர் குழந்தைகள் நல அலுவலகத்திற்கு வரும்போது, காவல்துறையினர் மூலம் பலவந்தமாக பிடுங்கிசெல்ல முயன்றபோது, எதிர்மனுதாரர் இதுகுறித்து குழந்தைகள் நல அலுவலகத்தில் தெரிவிக்க குழந்தைகள் நல அலுவலகத்திலும் மனுதாரரை சட்டத்திற்கு புறம்பாக செயல்பட கூடாது என்று எச்சரித்தனர். அதன்பின்பு நடந்த விசாரனையில் குழந்தை இனன்யா மனுதாரர் கூட செல்ல விரும்பாமல் எதிர்மனுதார் பராமரிப்பிலேயே இருக்க விரும்பியதால் அங்கேயும் மனுதாரர் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

மேலும், மனுதாரர் குழந்தையை ஒப்படைக்க சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் மனு தாக்கல் செய்து, விசாரணையில் மனுதாரரின் கோரிக்கை மனு தள்ளுபடி செய்துள்ளது. எனவே, மனுதாரரை அலைக்கழிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், எதிர்மனுதார் குடும்ப வாழ்க்கை கெட்டுவிடக்கூடாது என்ற எண்ணத்தில் சங்ககிரி சார்பு நீதிமன்றத்தில் HMOP.No.54/21 ல் மனுத் தாக்கல் செய்து தன்னுடன் மனுதாரர் சேர்ந்து வாழ உத்தரவு கோரி மனு செய்து மனுவும் விசாரனையில் உள்ளது. மேலும் திண்டுக்கல் மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் OP.No.129/2021 ல் மனுதி தாக்கல் செய்து குழந்தையை ஒப்படைக்க பரிகாரம் கோரியுள்ளார். DVOP.No.9/21 லும் ஜீவனாம்சம் கோரி மனுத்தாக்கல் செய்து மனு நிலுவையில் உள்ளது. எனவே, இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

**4.** எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்திருந்தும், எதிர்மனுதாரர் விசாரணைக்காக பல வாய்தாக்கள் ஏற்பட்டும், எதிர்மனுதாரர் அழைத்தும் ஆஜராகாததால் அவர் தோன்றாத் தரப்பினராகக் கருதப்பட்டார்.

5. மனு மற்றும் அத்துடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் யாவும் பரிசீலனை செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் இந்நீதிமன்ற தீர்விற்கு எழுகின்ற பிரச்சினை யாதெனில்

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா?

என்பதேயாகும்.

**6.** <u>தீர்வு</u>

இந்த மனுவின் மனுதாரர் குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் பிரிவு 20(1)(d) ன் கீழ் வாழ்க்கைப் பொருளுதவி கோரியுள்ளார்.

மனு மற்றும் வழக்கு ஆவணங்களை பார்வையிட்டதில் எதிர்மனுதாரர் மனுதாரரின் கணவர் என்ற சங்கதி முன் வழக்குகளின் மூலம் ஒப்புக் கொள்ளப்பட்ட சங்கதி என அறிய முடிகிறது. எனவே எதிர்மனுதாரர் கணவன் என்ற முறையில் மனுதாரரை பராமரிக்கும் உரிமையும், கடமையும், எதிர்மனுதாரருக்கு கட்டாயம் உள்ளது. எனவே இடைக்கால பராமரிப்பு தொகை வழங்க உத்திரவிடலாம் என இந்நீதிமன்றம் முடிவு காண்கின்றது.

பராமரிப்பு தொகையாக எவ்வளவு வழங்குவது குறித்து இந்நீதிமன்றம் பரிசீலனை செய்ததில், மனுதாரர், எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ மறுத்து வருவதும் ஆவணங்களின் வாயிலாக அறிய முடிகிறது.

எதிர்மனுதாரர் ஐடி துறையில் பணி செய்து வருவதாகவும், அதன்மூலம் வருமானம் ஈட்டி வருவதாகவும், மனுதாரர் தரப்பில் எடுத்துரைத்தாலும், அவைகளுக்கான ஆவணங்கள் எதையும் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யவில்லை.

இருந்த போதிலும், எதிர்மனுதாரர் அவருடைய மனைவியை பராமரிக்க வேண்டிய பொறுப்பு எதிர்மனுதாரருக்கு உள்ளது. மற்றும் தற்போதைய பொருளாதார சூழ்நிலையினை கருத்தில் கொண்டு, எதிர்மனுதாரர் கணவன் என்ற

முறையில் மனுதாரருக்கு மாதம் 1 க்கு இடைக்காலமாக ரூ.3,000/-ஐ பராமரிப்பு தொகையாக ஒவ்வொரு ஆங்கில மாதம் 10 ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமென ஆணை பிறப்பிக்கலாம் என இந்நீதிமன்றம் இம்மனுவில் முடிவு காண்கின்றது.

7. இறுதியாக, மனுதாரருக்கு, எதிர்மனுதாரர் மாதம் 1 க்கு ரூ.3,000/-ஐ வாழ்க்கைப் பொருளுதவியாக அசல் மனு DVOP.No.9/2021 (after full trial) முழு விசாரணை முடியும் காலம் வரை ஒவ்வொரு பிரதி ஆங்கில மாதம் 10 ம் தேதிக்குள் நேரடியாக மனுதாரர் வசம் செலுத்த வேண்டுமென உத்திரவிடப்படுகிறது.

8. இந்த உத்திரவின் உண்மைநகல் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரருக்கு இலவசமாக வழங்கவும் உத்திரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சில் விரிவாக்கம் செய்யப்பட்டு பின் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 27.03.2023 ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

K KARTHIK
Digitally signed by K KARTHIK
Date: 2023.03.27 18:52:33 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்**.1,**
கொடைக்கானல்**.**

மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் - இல்லை.

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் - இல்லை.

K KARTHIK
Digitally signed by K KARTHIK
Date: 2023.03.27 18:52:41 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்**.1,**
கொடைக்கானல்**.**